# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1 | Date : 12.09.2024
Case No. : **O.S. 339/2019** | Nationality : Indian
Name : முருகானந்தவள்ளி | Religion :
Father's/Husband's Name : கலைவாணன் | Age : 64
Village :
Taluk :

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அம்மா எனக்கு கொடுத்த சொத்தை பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமானது என்று பிரச்சனை செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண் 95/14E ல் கண்ட 14 செண்ட் விஸ்தீரணமுள்ள சொத்தாகும். மேற்படி 14 செண்ட் விஸ்தீரணமுள்ள சொத்திற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அம்மா எனக்கு எழுதிக் கொடுத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வாசாஆ 2 ஆவணம் 14 செண்ட் விஸ்தீரணத்திற்கு எனது தாயாரால் எனக்கு எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றாலும் 4 செண்ட் விஸ்தீரணத்திற்கு மட்டும்தான் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

2. எனது தாயார் ஜெகதாம்பாளுக்கு தாவா சொத்து எவ்வாறு கிடைத்தது என்றால் எனது தாயார் கந்தசாமி படையாச்சி என்பவரிடம் இருந்து வாங்கியுள்ளார். என் தாயார்

இறந்துவிட்டார். தாவா சொத்து எனது அனுபவத்தில் உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆதார் அடையாள அட்டை, வீட்டுவரி ரசீதுகள், மின் கட்டண ரசீதுகள் ஆகிவற்றை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கான வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் இவ்வழக்கில் என்ன கட்சி செய்துள்ளார்கள் என்று தெரிந்து கொண்டேனா என்றால் தாவா சொத்தில் பாதி அவர்களுக்கு சொந்தம் என்று கட்சி செய்து வருகிறார்கள். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள வருவாய்துறை ஆவணங்கள் மற்றும் செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. எனது தாயார் ஜெகதாம்பாள் தாவா சொத்தினை கிரயம் வாங்குவதற்கு முன்பே பிரதிவாதிகள் அவர்கள் இடத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

(**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது**).

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/-N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.